பத்திரிக்கைச்செய்தி

உரிமைச்சான்றிதழ் கொடுக்க லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அலுவலருக்கு 2 வருடங்கள் கடுங்காவல் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.ராஜேந்திரன், புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய சகோதரி பாஞ்சாயி பெயரில் உள்ள நிலங்களை பராமரித்து வந்துள்ளார். புகார்தாரர் தன்னுடைய ஒரு நிலத்தின் கிணற்றில் உள்ள மின்சார இணைப்பை மற்றொரு நிலத்தில் உள்ள கிணற்றிற்கு மின்சாரம் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த மின் வாரியம் உரிமைச்சான்றிதழ் வழங்குமாறு கேட்டுள்ளனர். புகார்தாரர் உரிமைச்சான்றிதழ் கேட்டு கோவிலூர்வட்டம், ஆலங்குடி தாலுக்கா கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.ரவி, கிராம நிர்வாக அலுவலர், கோவிலூர்வட்டம்,, ஆலங்குடி தாலுக்கா அவர்கள் தனக்கு ரூ.2,500/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, புதுக்கோட்டை பிரிவில் புகார் அளித்துள்ளார். மேற்படி புகார் அடிப்படையில் கடந்த 05.01.2012ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கையில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.ரவி, கிராம நிர்வாக அலுவலர் புகார்தாரரிடமிருந்து லஞ்சபணம் ரூ.2,500/-பெற்ற போது கைது செய்யப்பட்டார். பின் வழக்கில் புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை செய்யப்பட்டது. இவ்வழக்கில் இன்று 14.05.2025 திரு.ரவி, கிராம நிர்வாக அலுவலருக்கு 2 வருடங்கள் கடுங்காவல் தண்டணையும் மற்றும் அபராதம் ரூ.8,000/- விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.